





செய்தி வெளியீடு எண். 42/2018 நாள் 15.08..2018

## <u>சென்னைக் குடிநீர் வாரியத்தில் சுதந்திர தின கொடி ஏற்று விழா–</u>
## <u>வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. கோ.பிரகாஷ், இ,ஆ.ப., அவர்கள்</u>
## <u>தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்கள்.</u>

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய தலைமை அலுவலகத்தில் சுதந்திர தின கொடி ஏற்று விழா இன்று (15.08.2018) சிறப்பாக நடைபெற்றது. சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. கோ.பிரகாஷ், இ,ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

வாரியத்தில் 25 வருடங்கள் அப்பழுக்கற்ற முறையில் சிறப்பாகப் பணியாற்றிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் தலா ரூ.2,000/–(ரூபாய் இரண்டாயிரம்) ரொக்கப் பரிசினையும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் வழங்கி கௌரவித்தார்கள்.

மேலும் கடந்த ஆண்டு ஏற்பட்ட கடுமையான வறட்சியின் போது சென்னை மக்களின் குடிநீர் தேவையை சமாளிக்க புதிய குடிநீர் ஆதாரங்களான சிக்கராயபுரம் கல்குவாரி மற்றும் போரூர் ஏரியின் நீரை குடிநீர் ஆதாரமாக பயன்படுத்துவதற்கு பணியாற்றிய பொறியாளர்கள் அனைவருக்கும் பாராட்டுக் கேடயங்களையும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் வழங்கி கௌரவித்தார்கள்.

இவ்விழாவில் சென்னைக் குடிநீர் வாரிய செயல் இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர், இ.ஆ.ப., பொறியியல் இயக்குநர் திரு. ஜி. சத்தியமூர்த்தி, நிதி இயக்குநர்

திரு.கே.முத்துக்குமாரசாமி, தலைமைப் பொறியாளர் திரு.ஆர்.சிவசண்முகம், மேற்பார்வைப் பொறியாளர்கள், பகுதிப் பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர் வாரியம்